**செய்தி வெளியீடு எண்:413** **நாள்: 16.07.2012**

## மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. ஜெயபால் அவர்களின் அறிக்கை – 16.7.2012

ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் வானத்தில் துப்பாக்கியால் சுட்டு விரட்டியடித்ததாகவும்; படகுகளை சேதப்படுத்தி வலைகளை அறுத்தெறிந்ததாகவும்; மீன்பிடி சாதனங்களை உடைத்தெறிந்ததாகவும் 16.7.2012–ஆம் நாளிட்ட சில நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

கச்சத்தீவு அருகே மீன்பிடித்து கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது, இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச்சூடு என்ற செய்தி ஊடகங்களில் வெளியான உடனேயே, இது குறித்து விசாரணை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். இது குறித்து தமிழக மீனவர்களிடம் விசாரணை நடத்தியதில், "இரணியல் தீவு" அருகே மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது ஏதோ சத்தம் கேட்டதாகவும், இச்சத்தம் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டிருக்கும் சத்தமாக இருக்கலாம் என்றும், ஆனால் இலங்கை கடற்படை வானத்தில் துப்பாக்கியால் சுட்டதை எவருமே பார்க்கவில்லை என்றும், இச்சம்பவம் பற்றி உறுதியாக கூற இயலவில்லை என்றும் தெரிவித்தனர். 14.7.2012 அன்று இராமேஸ்வரம் மீன்பிடி தளத்திலிருந்து மீன்பிடிக்கச்சென்ற 697 மீன்பிடி விசைப்படகுகளும், மீனவர்களுடன், 15.07.2012 அன்று காலை பத்திரமாக

கரைக்கு வந்து சேர்ந்தன. மீன்பிடி படகுகளுக்கோ, மீன்பிடி சாதனங்களுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியிருந்தால், அதனை மத்திய அரசின் கவனத்திற்கு உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்கள் நிச்சயம் கொண்டு சென்றிருப்பார்கள். கச்சத்தீவினை திரும்ப மீட்பதற்கும் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலை நாட்டுவதற்கும் முக்கியத்துவம் அளித்து முனைப்புடன் செயல்பட்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, மீனவர்களின் நலனை பாதுகாக்க எப்பொழுதும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மை நிலை இவ்வாறிருக்க, ராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு என்று சில நாளிதழ்களில் வெளிவந்துள்ள செய்தி, உறுதிபடுத்தப்படாமல் மக்களிடையே பரபரப்பினை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக வெளியிடப்பட்டுள்ள செய்தி என்பதையும், அது உண்மைக்குப் புறம்பானது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கே. ஏ. ஜெயபால்
மீன்வளத் துறை அமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**